Registered as a News Paper in Ceylon விலை சதம் 15

23 AUG 1971

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 191

சாதாரண ஆவணி 7 ரஜப் 1 திங்கட்கிழமை (23-8-71)

நவநாகரீக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன 444
தந்தி இரத்தினம்ஸ்
50.கன்னாதிட்டி.யாழ்ப்பாணம்.

ரூபா 200 வருமானமுள்ள

## வர்த்தக ஸ்தாபனங்கள்

கோட்டை, ஞாயிறு

நாளொன்றுக்கு 200 ரூபாய் வருமானமுள்ள வர்த்தக ஸ்தாபனங்களை நடத்துகிறவர்கள் தமது சொத்துவிபரங்களை வருமானவரித் திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டும். இவ்வாறு தமது வருமானம் பற்றிய தகவல்களை அறிவிக்காதவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

தினம் 200 ரூபாய் வரை வருமானம் உள்ள வர்த்தக ஸ்தாபனங்களைப்பற்றிய விபரங்களை வருமானவரி திணைக்களம் சேகரித்து வருகின்றது.

இலங்கை-சீன டேபிள் டெனிஸ் 2-வது டெஸ்ட்

# இலங்கை ஆண்கள் கோஷ்டி வெற்றி!

## வீரர் கோமஸுக்கு சபாஷ்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை டேபிள் டெனிஸ் கோஷ்டிக்கும் உலகப்புகழ் சீன டேபிள் டெனிஸ் கோஷ்டிக்குமிடையில் யாழ். நகரமண்டபத்தில் நேற்றிரவு நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் ஆண்கள் பிரிவில் இலங்கை கோஷ்டி வெற்றி பெற்றது.

இலங்கை ஆண்கள் கோஷ்டியில் விளையாடிய வீரர்களான கோமஸ் நிஹால் பெரேரா, கப்டன் லூக்கஸ் ஆகியோர் மிகவும் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றது பாராட்டத்தக்கதாகும்.

குறிப்பாக இலங்கை வீரர் கோமஸின் ஆட்டம் பிரமிக்கத்தக்கதாக அமைந்திருந்தது. இவர் பங்குபற்றிய இரு ஆட்டங்களிலும் சீன வீரர்களுடன் மிகவும் கடுமையாகவும் சாதுரியமாகவும் விளையாடி வெற்றி பெற்றார். ஆண்கள் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற 5 ஆட்டங்களில் 3 ஆட்டங்களில் இலங்கை கோஷ்டி வெற்றிபெற்றது.

இருநாட்டு பெண்கள் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மொத்தம் நாலு போட்டிகளில் சீனக்கோஷ்டி 3-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. கனிஷ்ட ஆண்கள் கோஷ்டிகளுக்கிடையில் நடைபெற்ற மொத்தம் மூன்று ஆட்டங்களிலும் சீனக் கோஷ்டியினர் வெற்றி பெற்றனர் (தே.தி)

பாரிஸ் செல்லும் வழியில்

## சாவகச்சேரி 'நவம்' கலைஞரைச் சந்திப்பார்

யாழ்ப்பாணம், திங்கள்

பாரிசில் நடைபெறவிருக்கும் சர்வதேச பாராளுமன்றச் சங்கத்தின் 59-வது மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி என் நவரத்தினம் இன்று நண்பகல் பலாலி விமானநிலையத்திலிருந்து பிரயாணமாகிறார்.

### கருணாநிதியை சந்திப்பார்

இன்று நண்பகல் விமானத்தில் திருச்சிக்குப் போய்ச்சேரும் திரு வி என் நவரத்தினம் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் "தாயகம் திரும்பினோர் நல்வாழ்வுச்சங்க"த்தினரின் கூட்டத்தில் கலந்துகொள்வார். இச்சங்கத்தின் தூதுக்குழுவுடன் திரு. திரு நவரத்தினம் இம்மாதம் 25-ந் திகதி சென்னையில் முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியைச் சந்தித்துத் தாயகம் திரும்பினோரின் பிரச்னைகள் குறித்து எடுத்துக்கூறுவார். சென்னையிலிருந்து பாரிசுக்கு 25-ம் திகதி மாலை அல்லது 26-ம் திகதி புறப்படவிருக்கும் திரு நவரத்தினம் பாகிஸ்தான் தலைநகரான கராச்சியில் ஒருநாள் தங்கியிருப்பார்.

### முஜிபுரை சந்திக்க முயல்வார்

கராச்சியில் தங்கியிருக்கையில் சிறையிலிருக்கும் வங்காளதேசத் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானைச் சந்திப்பதற்கு முயற்சிசெய்வீர்களா? என்று நமது நிருபர் திரு நவரத்தினத்திடம் கேட்டபோது, 'நிச்சயமாக முயற்சிசெய்வேன்' பாகிஸ்தான் அதிகாரிகளையும் சந்

(6-ம் பக்கம் பார்க்க)

திருக்கேதீஸ்வர ஆலய அடிக்கல் நாட்டு விழா

## அடியார்கள் யாவரும் அத்திபாரமிடலாம்

திருக்கேதீச்சரம், ஞாயிறு

திருக்கேதீச்சர சிவாலயத்தின் அடிக்கல் நாட்டுவிழா இம்மாதம் 27-ந்திகதி வெள்ளிக்கிழமை காலை 6-05 மணிக்கு நடைபெறவிருக்கிறது

இவ்விழாவில் பங்குபெற வரும் அடியார் ஒவ்வொருவரும் அத்திபாரமிடக்கூடியவாறு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

### பஸ் வசதி

திருக்கேதீச்சர அடிக்கல் நாட்டுவிழாவில் யாழ்ப்பாணத்திலிருந்துசென்று விழாவில் பங்குபெற விரும்புவோர் செல்வதற்கு இம்மாதம் 26-ந் திகதி இ போ ச விசேஷ பஸ் சேவை ஒழுங்குசெய்யும். இதுபற்றி யாழ் மாநகர இணைப்பொருளாளர் ஸ்ரீ காந்தா அச்சக முகாமையாளருடன் தொடர்புகொள்ளலாம்.

## பிரிவி கவுன்சில் வழக்குகள்

கோட்டை, திங்கள்

நீதிஅமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு நிமல் ஜெயவிக்கிரம இன்று விமானமூலம் லண்டன் பயணமானார் லண்டன் பிரிவிகவுன்சிலில் விசாரணை செய்யப்படவிருக்கும் வழக்குகளை இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் உயர் நீதிமன்றத்துக்கு ஒப்படைப்பது சம்பந்தமாக அங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அவர் அங்கு சென்றுள்ளார்.

# ரயில் பிரயாணிகளுக்கு ஒரு வேண்டுகோள்

கொழும்பு, ஞாயிறு

ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள வேளைகளில் அப்பகுதிகளுக்குச் சென்றடையும் ரயில் வண்டிகளில் பொதுமக்கள் பிரயாணம் செய்யாதீர்கள். ஊரடங்குச்சட்டம் அமுலிலுள்ளவேளைகளில் அப்பகுதிகளுக்குச் செல்ல நேர்ந்தால் ரயில் நிலையங்களிலேயே பிரயாணிகள் விடியும்வரைக்கும் தங்கியிருக்கவேண்டிய சிரமம் ஏற்படலாம்.

ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள வேளையில் சென்றடையும் ரயில்வண்டிகளைத் தவிர்த்து ஊரடங்கு சட்டம் அமுலில் இல்லாதவேளைகளில் போய்ச்சேரும் வண்டிகளிலேயே பிரயாணம் செய்யுமாறு ரயில்வே பகுதியினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் மீண்டும் நான்கு மாவட்டங்களில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதையொட்டி ரயில்போக்குவரத்துக்களில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் புத்தளத்திலிருந்து காலை 4-50க்கு புறப்படும் ரயில் வண்டி மாத்திரம் காலை 5-10க்கு புறப்படும்படியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அனுராதபுரம், பொலநறுவை, வவுனியா, புத்தளம், ஆகிய நான்கு நிர்வாக மாவட்டங்களிலும் நேற்று மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இன்றிரவு 9 மணிமுதல் நாளைகாலை 5 மணிவரை இப்பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

## அதிகாரிகளை ஏமாற்றிய விமானி யார்?

கோட்டை, ஞாயிறு

சொந்த விமானம் ஒன்றில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டுத் தனவந்தர் ஒருவர் ஆயிரக்கணக்கான ரூபாய்வெளிநாட்டுச் செலாவணி மோசடி செய்துவிட்டு மறைந்துவிட்டாராம். இந்த ஆசாமிபற்றிய தப்புத்துலக்குவதில் இங்கிலாந்து "ஸ்கொட்லண்ட் யார்ட்" டும் பற்றியும் பொலிசாரின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரவிருக்கிறதாம்.

இந்த விமானச் சொந்தக்காரர் கடந்த மார்ச்மாதத்தில் இலங்கைக்கு வந்தாராம் இங்குள்ள ஒட்டலில் தங்கியிருந்த அவர் ஏப்ரல் மாதத்தில் ஒருதினம் ரத்மலானை விமானநிலையத்துக்கு வந்த தமது விமானத்தில் ஏறி கட்டுநாயக்காவுக்குப் போவதாக அதிகாரிகளிடம் கூறிவிட்டு புறப்பட்டாராம். ஆனால் அவர் அங்கு போகாமல் சென்னைக்குப் 'போய்விட்டதாகப்' பின்னர் செய்திகிடைத்ததாம். அவரது விமானத்தைத் திருத்துவதற்கும் எரிபொருள் கொடுத்ததற்குமான ஒரு தொகை பணத்தைச் செலுத்தாமலே அவர் அதிகாரிகளுக்கு 'டிமிக்கி' கொடுத்துள்ளார் பிரிட்டிஷ்காரர் எனக்கருதப்படும் இவர் பற்றிய தகவல்களை அறியவும், விசாரணைகள் நடத்தவும் பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**வெலிங்டன் சினிமா**
மானிப்பாய்
பி. ப. 2-30, 6-30, 10-00
ஏ.வி.எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
**அன்னையும் பிதாவும்**

**MANOHARA- Jaffna**
Daily
4-45, 7-00 & 9-45 p. m.
Saturday, Sunday 10-30 a. m.
Cornel Wild
in
BEACH RED
(War film - Color)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m. only
George Kennedy, Ann Jackson
in
FALSE WITNESS (cinemascope-)

**ரீகல்** யாழ்ப்பாணம் தினசரி பி. ப. 2-00
இரவு 9-45 மட்டும்
ஜெமினி - விஜயகுமாரி - நாகேஷ்
ராஜ்ஸ்ரீ - எஸ். வரலக்ஷ்மி
நடித்த
**அவரே என் தெய்வம்**
ஒரு குடும்பச் சித்திரம்

**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10.00 மணி
★ எம். ஜி. ஆர்.
★ வைஜந்திமாலா
★ பாலையா
நடித்த
**பாக்தாத் திருடன்**

**ராணி** சுந்தரராஜன் - நாகேஷ்
(யாழ்ப்பாணம்) சௌகார்ஜானகி - லக்ஷ்மி
பி. ப. 2-30 இரவு, 6-30, 10-00 நடித்த
**கஸ்தூரி திலகம்**

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலக்ஷ்மி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
**தலைவன்**

இப்பொழுது திரையிடப் படுகிறது
**வெலிங்டன் லிடோ**
(யாழ் நகர்) (யாழ். நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 காலை 10-30, பி. ப. 2-00
இரவு 10-00 மணி மாலை 6-00, இரவு 9-30
மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா—மைலன்
திரைகளில்
நடிகர் திலகம்
★ **சிவாஜிகணேசன்**
(3 வேடங்களில்)
★ **ஜெயலலிதா**
★ நாகேஷ் ★ நம்பியார்
★ சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்
**தெய்வ மகன்**
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்

## கேள்வி விளம்பரம்

### நாவற்குழி கிராமசபை

நாவற்குழி கிராமசபைத் தலைவரால் 30-8-71 முற்பகல் 9-00 மணி வரை கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் அரசநன்கொடை வேலைகளுக்கு சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் கிராமசபைத் தலைவருக்கு அனுப்பப்படுதல்வேண்டும். கேள்வியின் நகல் பிரதிகள் பகுதி நிறைவேற்றுப் பொறியலாளருக்கும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அதே நேரத்தில் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்வியைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை 28-8-71 முற்பகல் 11-30 வரை கிராமசபை அலுவலகத்தில் உரிய கேள்விப்பிணையும் பத்திரப்பணமும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திலும், பகுதி நிறைவேற்றுப் பொறியலாளர் அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

**வேலை விபரம்**

1. நாவற்குழி பாடசாலை வீதி (டோபிஸ் ரோட்) செப்பனிடுதல் கேள்விப்பத்திரப் பணம் ரூ 15/- கேள்விப் பிணைப்பணம் ரூ. 25/-.
2. கைதடி நாவற்குழி தெற்கு கிணறு வெட்டிக்கட்டுதல் கேள்விப் பத்திரப் பணம் ரூ. 10/-. கேள்விப் பிணைப்பணம் ரூ. 10/-.

சோ. சடாச்சரம் ஜே. பி.
அக்கிராசனர்,
கிராமசபை, நாவற்குழி.
நாவற்குழி,
கைதடி. 20-8-71 2979

## விளம்பரம்

கிளிநொச்சி - உருத்திரபுரம்
பயிர்ச்செய்கைக் கமிட்டி
கமவிதானை/எழுதுவினைஞர்
பதவிக்கான வெற்றிடம்

1. முழுப்பெயரும் நிரந்தர விலாசமும்:
2. வயது:
(30 வயதுக்குட்பட்டிருக்க வேண்டும்.)
3. கல்வித்தகைமை:
ஜி. சி. ஈ. (சாதாரணம்)
(ஆங்கிலம் சித்தியடைந்திருக்க வேண்டும்.)
4. வேதனம்: எல்லாமுமாக 150 ரூபாவும் சைக்கிள் அலவன்ஸ் மாதம் 12-50 சதம்.
5. விண்ணப்ப முடிவு திகதி: 31-8-71. (பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்)

குறிப்பு:-
(a) ஏரச்சிக் காரியாதிகாரி பிரிவில் நிரந்தரமாக வசிப்போருக்கு சலுகைவழங்கப்படும்
(b) நீர்ப்பாசனமுறையும் நெற்பயிர்ச்செய்கை அறிவு இன்றியமையாதது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: கௌரவ காரியதரிசி, உருத்திரபுரம் பயிர்ச்செய்கைக் கமிட்டி, கிளிநொச்சி. 2980

## வாடகைக்கு

உடுவில் பெண் பாடசாலை முகப்பில் இரு அறைகள் கொண்ட கடையும் சாப்புச்சாமான், தளபாடங்கள் மின்சக்தி பிறிட்ச் (Electric Fridge) உட்பட வாடகைக்கு விடப்படும். தேவை உடனடியாகத் தொடர்புகொள்ளவும். P. C. சுப்பிரமணியம், இளைப்பாறிய அதிபர், உடுவில். 3505

## திருமணம்

மணமகன் திருநிறைசெல்வன்
க. சத்தியசீலன்
(கொழும்பு ஜோட்டன் வணிக நிலைய உரிமையாளர் திரு கந்தையா தம்பதிகளின் புதல்வன்)
மணமகள் திருநிறை செல்வி
பூம்பாவை அமிர்தவல்லி
(கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு ஹண்டி பேரின்பநாயகத்தின் மகள்)

இடம்: மணமகள் இல்லம், "அமிர்தம்" மானிப்பாய்
காலம்: 27-8-71 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கும் 8 மணிக்குமிடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் சைவமுறைப்படி நடைபெறும்.
உற்றார் உறவினர் நண்பர்கள் அன்பர்கள் அழைக்கப்படுகின்றனர். 2978

## எலக்றிக்கல் போர்மன் தற்காலிக பதவி

மாநகரசபை-யாழ்ப்பாணம்

யாழ். மாநகரசபை ஆணையாளரால் மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இந்த நியமனம் தற்காலிகமானது. இப்பதவியில் நியமிக்கப்படுபவர் ஒருநாள் நோட்டீசுடன் பதவியிலிருந்து விலக்கம் செய்யப்படலாம்.

2: வேண்டியதகைமைகள்
(அ) வயது 1-9-71 அன்று விண்ணப்பதாரர் 18 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்டவராக இருக்கவேண்டும்.
(ஆ) கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரி மூன்றுண்டு பொறியியல் மாலை வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது சிற்றி அன்கில்ஸ், மின்பொறியியல் இன்டர்மீடியற் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவேண்டும்.
(இ) எல். ரி. டிஸ்றிபியூசன் லைன்ஸ் வேலை அனுபவம் மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்.

3. விண்ணப்பத்துடன் விண்ணப்பக்காரரின் தகைமைகளுக்கான சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் நபர் ரூபா 500/- ரொக்கக்கட்டுப்பணம் கட்டுமாறு கேட்கப்படலாம்.

விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளருக்கு விலாசமிடப்பட்டு 6-9-1971 அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்
19 ஆகஸ்ட் 1971
2981

## கல்வி

ஜி. சி. ஈ. வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு முதலிய பாடங்களுக்கு வீடு தோறும் சென்று இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 3483, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
3483

**நாகம்ஸ் சினிமா**
சன்னாகம்
தினசரி: 4-30க்கு மட்டும்
சனி, ஞாயிறு: காலை 10-30
Jim Brown
in
100 RIFLES

தினசரி மாலை 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
6-30, 9-45
திலீப்குமார்
வைஜயந்திமாலா
நடித்த
**பாட்டாளியின் சபதம்**

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

### விற்பனைக்கு

மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைப்பொருட்கள், திறம்வாசனைப்பத்தி, கிளவுகூடம், சாம்பிராணி, சந்தனம், குங்குமம், பன்னீர் மலிவாகக்கிடைக்குமிடம், எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்துக்கடை. கொழும்பு—யாழ்ப்பாணம். 3410

வழக்கறிஞருக்குச் சொந்தமான கார், "ஒஸ்றின் A 40 டெவன்" பார்வைக்கிருக்குமிடம் "மதனகிரி", தெல்லிப்பழை. 3506

**காணி**
வேலணை வங்களாவடியில் வர்சாவற்றுறை வீதியில் 24 பரப்புவயற் காணி முழுமையாகவோ பகுதிகளாகவோ விற்பனைக்குண்டு. வீடு கட்ட மிகவும் பொருத்தமான இடம். வாங்க விரும்புவோர் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 3507, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்
3507

**என்ணு**
புத்தளமாவட்டத்திலுள்ள மத்தில் 100 புசல் என்ணு விற்பனைக்குண்டு. வாங்குபவர்கள் மத்திலிருந்து தாங்களே வாகனத்தில் எடுத்துச் செல்லுதல்வேண்டும். கேட்கும் விலை விபரத்துடன் தொடர்புகொள்ளவும். இரத்தினவேல், 48, எடின்பேர்க் கிறெசென்ட், கொழும்பு. 3504

**வீடு**
பருத்தித்துறை தபால் கந்தோருக்கு அருகாமையில் கடற்கரை ரோட்டில் சகல வசதிகளுடன் நல்ல தண்ணீர் உள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. பெ. சுந்தரலிங்கம், புறக்ரர், கடற்கரை வீதி, பருத்தித்துறை. 3503

### தேவை

பழைய பித்தளை அல்லது பாவிக்க முடியாத நிலையிலுள்ள செம்புச் சாமான்கள் தேவை. தகுந்த விலை கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். Samuel Sons & Co Ltd 206, 208. Hospital Road, Jaffna. 3250

சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல் அறிவுள்ள கணக்குப் பயிற்சியாளர் தேவை. அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன், சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3498 C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 3498

### விற்பனைக்கு

ஒரு இங்கிலீஸ் மோட்டர் G. E. C.) (10 H. P. . R. P. M. 950) ஒரு ஸ்ராட்டர் 15 A. M. P. (M E M.) ஒரு 12 இஞ்சி. பிறிமியர் கிரைண்டர் சொற்ப நாட்கள் மட்டும் பாவித்தது. வாங்கிய உடன் பூட்டி வேலை செய்யலாம். தேவை வந்து பார்க்கவும், பரமசிவம் றைஸ் மில். வேதாரணியடி கே. கே. எஸ். ரோட். கொக்குவில். 3501

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## வங்காள தேசத்துக்கு விசுவாசம் தெரிவித்து

# ஈராக்கிலுள்ள பாக். தூதர் பதவி துறந்தார்

லண்டன், ஆகஸ்ட். 22

**ஈராக்கிலுள்ள பாகிஸ்தான்தூதர் தம்பதவியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார். வங்காள தேசவிடுதலை இயக்கத்துக்கு விசுவாசம் தெரிவித்து அவர் தம்பதவியை ராஜிநாமாசெய்துள்ளார்.**

ஷேக்முஜிபுர் ரஹ்மான் விசாரிக்கப்படுவதை அவர் கடுமையாகஎதிர்த்துள்ளார். கிழக்குப்பாகிஸ்தான் மீது பாகிஸ்தான் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் விசாரிக்கப்படுவதே தாம் பதவியிலிருந்து விலகுவதற்கான கடைசிக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்:

திரு அப்துல் ஹதே என்ற அந்தத் தூதுவர் ஈராக்கில் 8 மாதங்கள் பாகிஸ்தான் தூதுவராக இருந்துள்ளார். அதற்கு முன்னர் கல்கத்தாவில் அவர் துணைத் தூதுவராக இருந்தவராம். வங்காளதேச விடுதலை இயக்கத்தின் முக்கிய பணிகள் லண்டனிலேயே நடைபெறுவதால் தாம் இங்கு வந்திருப்பதாக அவர் கூறினார்.

பதவியை ராஜிநாமாசெய்தபின் டாக்ஸியொன்றை அமர்த்திக்கொண்டு நேராக குவாய்த் சென்றதாகவும் அங்கிருந்து விமானத்தில் லண்டன் வந்ததாகவும் அவர் சொன்னார் அவரது மனைவிமக்களும் லண்டனில் இருக்கிறார்கள்.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து வங்காளதேச விடுதலை இயக்கத்துக்கு விசுவாசம் தெரிவித்து விலகிக்கொண்டுள்ள அதிகாரிகளில் இவரே மிகஉயர்பதவியிலிருந்த அதிகாரியவார்.

இதேசமயம் பிரிட்டனுக்கு பாகிஸ்தான் புதிய ஹைகமிஷனர் ஒருவரை நியமித்திருப்பதாக அறிவித்துள்ளது.

கிழக்குப்பாகிஸ்தானில் பல பாகங்களிலும் விடுதலைப்படையினர் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவருகிறார்கள் என்று செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு இடத்தில் 10 சிப்பாய்கள் கொலைசெய்யப்பட்டதாகவும், இன்னொரு இடத்தில் 13 பேர்கொல்லப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகின்றது. யந்திரத்துப்பாக்கிகள், கைரகத்துப்பாக்கிகள் மோர்ட்டர்கள் போன்றவற்றால் விடுதலை இயக்கத்தினர் தாக்குதல்களை நடத்திவருகின்றார்களாம்.

விரைவில் பருவகாலம் மாறவிருப்பதை விடுதலைப் படையினர் ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் அப்பொழுது நிலைமைகள் தங்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்று கருதுவதாகவும்சொல்லப்படுகிறது.

மேற்கு ஜெர்மனி பாகிஸ்தானுக்கு அளித்து வந்த உதவிகளை நிறுத்துவதற்குமுடிவு செய்ததின் காரணமாக கிழக்குப் பாகிஸ்தானில் 8 அபிவிருத்தித் திட்டங்கள்முடங்கிக் கிடப்பதாகக் கூறப்படுகின்றது உதவிகள் நிறுத்தப்பட்டதுடன் மேற்குஜெர்மன் நுற்பசிப்பந்திகளும் திருப்பியழைக்கப்பட்டு விட்டார்களாம்.

### இந்திய ஊடுருவல்

பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்த இந்திய ஊடுருவல்காரர் 61பேரை பாகிஸ்தான் ராணுவம் கொன்றுவிட்டதாக அறிவித்துள்ளது ஒன்பது இந்தியர்களைச் சிறைப் பிடித்திருப்பதாகவும் ராணுவத்தினர் அறிவித்துள்ளனர். இந்தச் சம்பவம்பற்றி இந்தியத் தரப்பில் எதுவித தகவலும் கிடைக்கவில்லை

கிழக்குப் பாகிஸ்தானுக்கும்

# இஸ்ரேல் நாணயம் மதிப்புக் குறைந்தது

டெல்அவிவ், ஆக 22

இஸ்ரேல் அரசாங்கம் தனது நாணயத்தின் பெறுமதியை 20சதவிதம் குறைத்திருக்கின்றது.

ஐரோப்பாவுக்கும் இதர நாடுகளுக்கும் இஸ்ரேல் ஏற்றுமதி செய்யும் பொருட்களின் நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டுவிடாமலிருப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம். அமெரிக்க டாலரைக் காப்பாற்று வதற்காக அதிபர் நிக்ஸன் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து இஸ்ரேல் தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்துள்ளது

நோர்வே, பெல்ஜியம் போன்றநாடுகளும் தங்களின் நாணயங்களின் பெறுமதியை ஸ்திரப்படுத்துவதற்கு ஆலோசித்து வருகின்றன.

இந்தியாவிலுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கும் உதவிகள் அளிப்பது சம்பந்தமாக ஆலோசனை கூறுவதற்கென 6பேர் கொண்ட சபையொன்றை அதிபர் நிக்ஸன் அமைத்துள்ளார். அகதிகளுக்கான உதவிகள் விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமென்று அதிபர் தெரிவித்துள்ளார்

—

### அம்பாறையில் வெங்காயச் செய்கை

சாய்ந்தமருது, ஞாயிறு

அம்பாறை மாவட்டத்தில் பரவலாக வெங்காயச் செய்கை எதிர் பார்க்கப்பட்டதை விட கூடுதலான அளவு அதிகரித்துள்ளது. என்று விவசாயத் திணைக்களம் தயாரித்துள்ள புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வருகிறது. அம்பாறை மாவட்டம் வெங்காயச் செய்கைக்கு ஏற்ற நிலவளமும் நீர்வளமும் சுவாத்தியமும் உடையதென விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவு அம்பாறை மாவட்டத்தில் பரவலாக நடத்திய ஆராய்ச்சியின் போது கண்டு பிடித்துள்ளது.

# பொலீவியாவில் புரட்சி: அதிபர் தப்பி ஓட்டம்?

லாபாஸ், ஆகஸ்ட் 22

பொலீவியாவில் முக்கிய நகர்கள் பலவற்றில் கடுமையான சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இடதுசாரி ஆட்சியாளருக்கு எதிராக வலதுசாரிகள் போர்தொடுத்துள்ளனர். ராணுவத்தலைமை அதிகாரிகள் வலது சாரிகளுடன் சேர்ந்துகொண்டுள்ளனர்.

பொலீவியா அதிபர் டோரேஸ்தமது மாளிகையிலிருந்து வெளியேறி தமக்கு விசுவாசமான படைகளுடன் சேர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. லாபாஸ் நகரில் கடும் சண்டை நடைபெறுகின்றது'

நாட்டின் நான்கில் மூன்று பங்கும்புரட்சியாளர்களிடம் வீழ்ச்சியுற்றிருக்கின்றதாம். ஆங்காங்கே அதிபருக்கு விசுவாச முள்ளபடைகள் புரட்சியாளர்களை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கின்றன. அதிபருக்கு விசுவாசமானபடைகளுடன் சேர்ந்து தொழிலாளர்களும் ஆயுதம் தரித்துப் போரிடுவதாகக் கூறப்படுகின்றது.

ராணுவஜெனரலின் வசம் பிடம் விசுவாசப்படைகளால் தாக்கப்படுவதாகவும் செய்திகள் கூறின.

— —

### கலைமகள் ச. ச. நிலைய முன்மாதிரி

சுழிபுரம் ஞாயிறு

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தினர் தண்ணீர் விநியோகிக்கும் திட்டமொன்றைச்சுழிபுரம் கிராமசபையின் உதவியுடன் நிறைவேற்றவுள்ளனர். இதன் பொருட்டு புதிய கிணறு ஒன்று வெட்டப்பட்டு இக்கிணற்று நீரைக் குழாய் மூலம் விநியோகிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகளை நிலைய செயலாளர் திரு மு தம்பையா கவனித்துவருகின்றார்.

### முகமூடித் திருடர் சிக்கினர்

பருத்தித்துறை ஞாயிறு

வீட்டில் ஒரு வயோதிப மாதும் பேரப்பிள்ளையும்மட்டும் இருந்தபோது அவர்களைப் பயமுறுத்தித் திருட எத்தனித்து இரவுநேரத்தில் முகமூடியணிந்து சென்ற திருடர் கோஷ்டி பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர். நிலைமையை உணர்ந்த அயலவர் நெல்லியடிப் பொலிசாருக்கு அறிவித்து 'முகமூடிகளைக் கைது செய்ய உதவினர். திருடர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

### இன்னும் முடிவு இல்லை

சைகோன், ஆகஸ்ட் 22

தென்வியட்னும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது பற்றி தாம் இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லையென்று தென்வியட்னும் உதவிஜனாதிபதி எயர் மார்ஷல் கா-ஓ-கி தெரிவித்துள்ளார்.

# 'கறுப்பர் நாட்டு தலைவருக்கு தென்னுபிரிக்காவில் வரவேற்பு'

ஜோஹன்னர்ஸ்பேர்க், ஆக. 22

மலாவி நாட்டின் அதிபர் டாக்டர் கமாஸ் பண்டா கடந்த வெள்ளியன்று தென்னுபிரிக்காவுக்கு விஜயம் செய்து புதிய சரித்திர நிகழ்ச்சி யொன்றை ஏற்படுத்தினர்.

கறுப்பர் நாட்டுத் தலைவர் ஒருவர் ராஜாங்க மரியாதையுடன் தென்னாபிரிக்காவில் வரவேற்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

டாக்டர் பண்டாவுக்கு அரசாங்கம் அளித்த ராஜாங்க விருந்தில் போது வெள்ளையர்பிரமுகர்களையும் வெள்ளையர் அல்லாத மக்கள் தலைவர்களையும் டாக்டர் பண்டா இணைத்துவைத்தார்.

வெள்ளையர் அல்லாத மக்களும் வெள்ளையர்களும் அருகருகே அமர்ந்து சாப்பிட்டார்கள்.

மலாவி அதிபரின் அழகிய கறுப்பு மனைவிக்கும் மலாவி அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வமான விருந்தாளி செல்வி செஸிலா கட்ஸமிராவுக்கும் இடையிலிருந்த திமிர் தென்னுபிரிக்க அரசின் பிரதம மந்திரி திரு. ஜோன் வால்தஸர் வொஸ்டர் அமர்ந்திருந்தார். இந்தக்காட்சியை டெலிவிஷன் காமிராக்காரர் படம் பிடிப்பதை திரு. வொஸ்டார் தடுக்கப்பார்த்தார். முடியவில்லை.

டாக்டர் பண்டாவும் மிகக் கவனமாகவே நடந்து கொண்டார். நன்றி தெரிவித்துப் பேசுகையில், தமக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த தென்னுபிரிக்க அதிபரின் பவுச்சை தோளின் மீது அன்போடு தட்டிக்கொடுக்கவும் அவர் தவறவில்லை. வெள்ளையர்கள், வெள்ளையர் அல்லாதவர் கறுப்பர்கள் என்று எல்லோரோடும் கைகுலுக்கினர் அதில் அவர் களைப் படைந்ததாகவோ தெரியவில்லை. தெருக்களில் குழுமிநின்ற பல்வேறு இனமக்களும் அவருக்கு அளித்தவரவேற்பை அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

—

### கிணற்றில் விழுந்து முதியவர் மரணம்

சங்கானை, ஞாயிறு

75 வயதான சங்கானையைசேர்ந்த மலேயன் பென்சனரான தம்பாபிள்ளை என்பவர் கிணற்றில் மூழ்கி மரணமானர். அதிகாலை தமது வீட்டுக் கிணற்றில் இவர் தண்ணீர் அள்ளும்போது தவறுதலாகக் கிணற்றில் விழுந்ததாகவும் அயலவர் உதவியுடன் இவர்வெளியில் எடுக்கப்பட்டு முதல் உதவி அளிக்கப்பட்டதுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாகவும் விசாரணையில் தெரிய வந்தது. அதிர்ச்சியினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

29-வது இலக்க மகாஜன சம்பத

மகாஜன சம்பத

மேலும் பல செல்வங்களை

உங்களுக்கு வழங்க இருக்கின்றது

விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்

தேசிய லொத்தர் சபை

# நவநகராகும் நாவற்குழி வீடமைப்புத் திட்டம்

## கமிஷனர் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள் "குடியிருக்க நிலமில்லாதவர்களுக்கென நிலம் எடுத்துக் கொடுக்கும் பெரும் பணியில் கடந்த 13 வருடங்களாக அயராது உழைத்து அதில் வெற்றியைக் கண்ட இலங்கையிலேயே மிகப் பெரியதும் சிறந்ததுமான கூட இலங்கை வீடமைப்புச் சங்கத்தின் சாதனை இலங்கையின் ஏனைய பகுதிகட்கு முன்மாதிரியான எடுத்துக்காட்டாகும். இப் பெரும் பணியில் சலியாது உழைத்த மேற்படி சங்க ஆணையாளர்களுக்கும், தலைவர், காரியதரிசி, தனதிகாரி ஆகியோருக்கும் எனது பாராட்டைத் தெரிவிக்கின்றேன்"

இவ்வாறு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற நாவற்குழி வீடமைப்புத்திட்டக்காணிச் சீட்டிழுப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய தேசிய வீடமைப்புத் திணைக்கள ஆணையாளர் திரு. ஐ. இதிஸ்ரி பெர்னாண்டோ குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு சங்க உப தலைவர் திரு. ரி. சீனிவாசகம், தலைமை வகித்தார். வடக்கு வட்டாரத்தியமான உதவி ஆணையாளர் திரு. எஸ். ஆர். பெர்னாண்டோ, யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, நாவற்குழிக் கிராமசபைத் தலைவர் திரு. சடாட்சரம் ஆகியோர் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

திரு. இதிஸ்ரி பெர்னாண்டோ மேலும் பேசுகையில் கூறியதாவது:

இத்திட்டத்தில் காணியைப் பெற்றுக்கொடுப்பது மாத்திரமல்லாது, நாவற்குழியில் நவநகரை உருவாக்குவதற்காகப் பிரதான வீதிகள், குறுக்குவீதிகள், சந்தை, வைத்தியசாலை நிலையம், கூட்டுறவு விற்பனை நிலையங்கள், விளையாட்டிடங்கள், பொழுதுபோக்கு நிலையங்கள், பூங்கா ஆகிய சமூகத் தேவைகளையும் அளிக்க இவர்கள் 25 காணித்துண்டுகளை ஒதுக்கியுள்ளனர்.

இத்திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் நீர் விநியோகவசதி, மின்சாரவசதி, வீடுகள் கட்டுவதற்குரிய சாமான்கள் கொண்டுசெல்வதற்குரிய பாதைவசதிகள் அமைப்பதுமிக அவசியம். இங்கு அமைக்கப்படும் வீடுகள் கூடுதல் 1200 சதுர அடிகொண்டதாக இருக்கும் மேலும் கணவன், மனைவி ஆகிய இருவரினதும் மாதாந்தவருமானம் ரூபா 1750க்கு குறைவாக உள்ளவர்களுக்கு வீடுகட்டக் கடன்வசதியளிக்கப்படும்

இச்சங்கம் அரசாங்கத்திற்கு எதுவித செலவுமின்றி ரூ. 2,57,250 செலுத்தித்தான் இக்காணியைப் பெற்றிருக்கின்றது.

உதவி அரசாங்க அதிபர் திரு முருகேசம்பிள்ளை வட இலங்கை வீடமைப்புச் சங்கத்தின் சாதனையைப் பாராட்டிப் பேசினார். மேற்படி சங்கக் காரியதரிசி திரு சி. கந்தமூர்த்தியின் நன்றியுரையுடன் சீட்டிழுப்பு ஆரம்பமானது.

"நற்பிரஜைகளை உருவாக்குவதில்

# ஆசிரியரும் பெற்றோருமே பொறுப்பாளிகள்"

உடுப்பிட்டி, ஞாயிறு "சமுதாயப் பிரச்சினையைப் பாடசாலையுடன் இணைப்பது பாடசாலையின் வளர்ச்சியையும் கல்வியையும் பாதிக்கும். காலம் வரும்போது எந்தப் பிரச்சினைகளும் தாமாகவே தீர்ந்துவிடும். பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் நற் பிரஜைகளை உருவாக்குவதிலும் பெற்றோர்-ஆசிரியர்கள்தான் பொறுப்பாளிகள்" என்று கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் சைவப்பாடசாலை பெற்றோர் ஆசிரியசங்கத்தைபுனரமைப்புச் செய்துவைத்து பேசுகையில் தலைமையாசிரியர் திரு எஸ். தாமோதரம்பிள்ளை கூறினார் இப்பாடசாலைக்குத் தேவையான மூன்று பரப்புக் காணியை அரசாங்கத்தின் உதவியுடன் வாங்குவதற்கு முயற்சித்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. எஸ். செல்வநாயகம் பேசுகையில் "பிள்ளைகளைப் பெற்றோர் ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் வாழப் பழக்க வேண்டும். பெற்றோரும் ஆசிரியர்களும் பரஸ்பர நல்லெண்ணத்துடன் கருமம் ஆற்றி மாணவர்களை நல்வழியில் நடத்திச்செல்ல வேண்டும். இப்பாடசாலை விரைவில் மாதிரிப் பாடசாலையாகப் பிரகடனப்படுத்துவதற்கென நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இது இப்பகுதிப் பிள்ளைகளுக்கு வரப்பிரசாதமாக அமையும்" என்று கூறினார்.

செயலாளர் ஆசிரியர் திரு. த மணிசுந்தரம், திரு. ஜே. ஜெயக்குமார், திரு. எஸ். கே. இரத்தினம் மற்றும் உடுப்பிட்டிக் கிராமசபை உறுப்பினர் திரு. இ. கோபாலு. திரு. சி. தியாகேஸ்வரன் ஆகியோரும் பேசினர்.

## 'கண்ணீர்க் காணிக்கை போதாது'

—வி. என்.

சட்டுலில், ஞாயிறு "டாக்டர் நாகநாதன் அரசியல் விஷயத்தில் உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசாத மாவீரனாக இருந்தாலும் அரசியல் விஷயத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களில் அவர் அனைவரையும், உள்ளன்போடு ஒன்றாக நேசித்துவந்த ஒரேகாரணத்தினால்தான் அவரின் இறுதி யாத்திரையின்போது ஆயிரக்கணக்கான சிங்கள நண்பர்களும் அரசியல் தலைவர்களும், மழையையும்பொருட்படுத்தாது கலந்துகொண்டார்கள்"

சாவகச்சேரியில் நேற்று நடந்த அமரர் நாகநாதனின் அனுதாபக் கூட்டத்தில், சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

வழக்கறிஞர் திரு. என். அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு நவரத்தினம் மேலும் கூறியதாவது: "மறைந்த மாவீரர் நாகநாதன் உயர்ந்த பண்புடையவர், சிறந்த அரசியல் வீரர். மக்கள் மனதில் நிறைந்த இடம்பெற்றுவிட்டவர். உத்தம வீரனுக்கு நாம் கண்ணீரால் அஞ்சலி செலுத்தினால் மட்டும் போதாது. அவர் தமிழ் மொழி, கலாசாரத்தை பாதுகாக்க எந்தவழியைப் பின்பற்றினாரோ, அந்த அடிச்சுவட்டை பின்பற்றுவதே தமிழரின் முக்கிய கடமையாகும்.

மற்றும் பலரும் பேசினர்.

## சேவைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள் நிர்வாகத்திறனும், பரந்த அனுபவமும் நிறைந்த ஓய்வுபெற்ற அதிபர் திரு. க. இராமநாதனின் சேவை தொடர்ந்து கல்வித்துறைக்கு மிக அவசியமானது என்று நெடுந்தீவு மாவித்தியாலய அதிபர் திரு. நா. குருநாதன், நெடுந்தீவு அமெரிக்கமிஷன் பாடசாலை அதிபராக 32 வருடங்கள் தொடர்ந்து கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திரு. இராமநாதனுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசுகையில் கூறினார்.

வண. சாம் தம்பு தலைமையில் நடைபெற்ற விழாவில் தலைவர் தமது உரையில், இளைப்பாறிய அதிபர் கல்விச்சேவைக்கு மட்டுமல்லாமல் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபட்டு உழைத்தாரென்றும். இவரின் சேவையினால் பாடசாலை முன்னணியில் நிற்பதாகவும் மாணவர்கள் பலர் உயர் கல்வி பெறத் தூண்டுகோலாக இருந்ததென்றும் கூறினார். ஆசிரியர் திரு க சிவஞானமூர்த்தி விழாச்சபை சார்பில் பாராட்டுப்பத்திரம் வாசித்தளித்தார்.

ஓய்வுபெற்ற அதிபரின் சேவைகளைப் பாராட்டி வித்துவான் சு அடைக்கலமுத்து. திருவாளர்கள் எஸ் ஞானராசா, த வேதநாயகம், பேக்மன்ஸ், எஸ் வேதநாயகம், எஸ் அமிர்தநாதர் சு முருகேசு, ஏ கலகரத்தினம், வி சபாரத்தினம் ஆகியோரும் மாணவர்கள் சார்பில் செல்வன் இ பாஸ்கரனும் பாராட்டுரை வழங்கினர்.

மக்கள் சார்பில் ஓய்வுபெற்ற அதிபருக்குப் பொன்னாடை போர்த்து, பொற்கிழி, தங்கச்சங்கிலி என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன. சபா குழுவினரின் பிக்ஷாக்காரன் என்னும் நாடகமும், மாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. திரு க சதாசிவம் ஆசிரியர் நன்றியுரை கூறினார்.

## இ. மு. சங்கக்கூட்டம்

மருத்திதுறை ஞாயிறு துன்னாலை தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இம்மாதம் 23-ம் திகதி கட்டைவேலி ஐக்கிய சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. தலைவர் திரு சா வி பொன்னையா தலைமையில் நடக்கவிருக்கும் இக்கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு க. ஜெயக்கொடி காரியாதிகாரி திரு கே மாணிக்கவாசகர். இ மு ச அதிகாரி திரு எம் ஸ்ரீபாலேஸ்வரன் ஆகியோர் பேசுவார்கள்,

## புதிய முகாமையாளர்

பருத்தித்துறை. ஞாயிறு கட்டைவேலி ஆரம்பச்சங்கப் பொது முகாமையாளராக திரு. எஸ் தாமோதரம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார் இடமாற்றம் செய்யப்பட்ட திரு. கே. சோமசுந்தரத்தின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. தாமோதரம்பிள்ளை அரசாங்க சேவை முதலாந்தர எழுதுவினைஞராகவிருந்து இளைப்பாறியவர் என்பது குறிப்பிடத்தக்கது

# இன்றைய சைவ மாணவன் நிலை: உதவி மேயர் கவலை

குருநகர் ஞாயிறு சைவசமயமும் அதன் தத்துவங்களும் மக்கள் மனதிலெல்லாம் அன்றி இடம்பெறவேண்டுமென்றால் அவற்றை அறியக்கூடிய நூல்கள் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதியும், படிக்கக் கூடிய இடங்களும் இருக்க வேண்டும். அவற்றை ஏற்படுத்துவது சைவசமயத்திற்கும் சைவ மக்களுக்கும்செய்யும் ஒரு நல்ல தொண்டாகும்.

இவ்வாறு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவசமய நூல் நிலையம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசிய யாழ் நகர உதவி மேயர் திரு ஆ துரைராஜசிங்கம் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் முன்னர் சைவசமய பாடத்தில் தாராளமாகச் சமய அறிவு போதிக்கப்பட்டு வந்தது, இதனால் சமய அறிவையும் தத்துவங்களையும் தேவார திருவாசகங்களையும் அறிந்து எம்மவர்கள் பலர் பயன் அடைந்தனர். ஆனால் இன்று ஒரு மாணவனைத் தேவாரம் ஒன்று கேட்டாலோ, சமயத்தில் ஏதாவதொன்றைக் கேட்டாலோ தெரியாதென்றுதான் கூறுவான். இவர்கள் கடைசியில் ஞானமில்லாதவர்களாகிவிடக்கூடும். எனவே சைவமக்கள் தமது சமயத்தை நன்கு அறிவதற்கும் அதன்படி ஒழுகுவதற்கும் இப்படியான சமய நிலையங்களும் சமய நூல்நிலையங்களும் அமைக்கவேண்டியது எமது கடமையாகின்றது என்று குறிப்பிட்டார்.

"கேதீஸ்வரப்பணியில்

## வலி. கிழக்கின் பங்கு"

உரும்பராய், ஞாயிறு "இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் காடாயிருந்த திருக்கேதீஸ்வரப் பகுதியில் ஆலயம் அமைக்கப்பட்டு 1903-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது, இந்த இடத்தில் அந்நியரால் அழிக்கப்பட்ட திருக்கேதீஸ்வர ஆலயம் நிறுவப்படவேண்டுமென்பதே நாவலர் பெருமானின் முயற்சியாயிருந்தது. இந்தப்பகுதி புறச்சமயத்தவர்கள் கைக்குப் போகாமல் எடுத்த பெருமையும் நாவலர் பெருமானுக்கேயுண்டு. இந்தப்பணியைப் பிற்காலத்தில் தொடங்கி திருப்பணி யாற்றிய பெரியார்கள் வரிசையில் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனும் சேர். கந்தையா வைத்தியநாதனும் அடங்குவர். திருக்கேதீஸ்வரத் திருப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்த பெரியாரான கந்தையா வைத்தியநாதன் வலிகாமம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவராவர். ஆகவே திருக்கேதீஸ்வரத் திருப்பணியை நிறைவேற்றும் பொறுப்பில் பெரும் பங்கு வலிகாமம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தது. நாவலர்தொண்டாற்றும் பணியை நிறைவேற்றுவதே திருக்கேதீஸ்வரத் திருப்பணியாகும்."

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற் பேசிய உதவி அரசாங்க அதிபர் திரு. இ. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு மு வைத்திலிங்கம், திரு ச அம்பிகைபாகன் ஆகியோரும் பேசினர்

செயற்குழுஒன்றும்தெரிவு செய்யப்பட்டது

## புத்தளம் டெலிபோன் தொடர்பு

புத்தளம், ஞாயிறு புத்தளம் தொலைபேசித் தொடர்பு அடிக்கடி பாதிக்கப்படுகிறது மாதத்தில் பெரும்பகுதி நாட்களும் தொலைபேசித் தொடர்பு சீரற்றிருப்பதாகவும் கொழும்பு நகர் இங்கிருந்து 82 மைல் தொலைவிலிருந்தும் கொழும்புடன் தொலைபேசித் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாகவும் புத்தளம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


# ராதா

# குருபற்பொடி

பற்களை வெண்மையாக்கி வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல் அரணை, முரசு கரைதல், வாய்நாற்றம் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.

எங்கும் கிடைக்கும்.

ராதா குருபற்பொடி

என்று கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பாளர்கள்:

" ராதா புரடக்ஸ் "

ஏக விநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனைதிகள் வியாபாரம்.)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541

'பாலேந்திரா பில்டிங்' 60, செட்டியார் தெரு. கொழும்பு-11

# மீற்றர் புரட்சிக்குத் தயாராகுங்கள்!

சோஷலிசப் புரட்சி, பொருளாதாரப் புரட்சி, தொழிற் புரட்சி பசுமைப் புரட்சி என்ற இன்னோரன்ன பல்வேறு புரட்சிகளை உலகம் அனுபவித்துள்ளது. இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. சமீப காலத்தில் உலகின் பலபகுதிகளிலும் சகல துறைகளிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தக்கூடிய வகையில் ஒரு புதிய புரட்சி ஆரம்பமாகியுள்ளது. இப்புரட்சிக்கு நம் சிறிய தீவாகிய இலங்கையும் தயாராகிக்கொண்டிருக்கிறது. அதுதான் "மீற்றர் புரட்சி" ஆனாது அளவு முறைகளில் நாம் இதுவரை காலமும் கையாண்டுவந்த முறைகளை விடுத்து மீற்றர் அளவு முறைகளைக் கைக்கொள்ளுவதாகும்

## உலக வர்த்தகத்தில்

இன்று உலகில் ஏற்பட்டுள்ள இப்புரட்சியின் விளைவால் உலக ஜனத்தொகையில் 83 வீதமானோர் தம் தினசரி வாழ்வில் மீற்றர் அளவுமுறையைப் பயன்படுத்திவருகிறார்கள்

இதுமட்டுமல்ல உலக வர்த்தகத்தில் 75 வீதம் இந்த மீற்றர் அளவுமுறையை அனுசரித்தே நடைபெறுகிறது. உலகில் இம்முறை தீவிரமாகப் பரவிவருவதை நோக்குமிடத்து 1980-ம் ஆண்டளவில் உலக வர்த்தகம் முழுவதுமே மீற்றர் அளவு முறையில் நடைபெறும் என நாம் எதிர்பார்க்கலாம்

## எமது நாட்டில்

உலக நாடுகளின் வெகு துரிதமாகவும் தீவிரமாகவும் இந்த அளவு முறையை நோக்குமிடத்து சமூக பொருளாதார அரசியல் துறையில் வளர்ச்சியடையவும், உலக நாடுகளிடையே நல்லுறவை வளர்த்துக் கொள்ளவும் முன்னிற்கும் எமது நாடும் இப்புரட்சியை வரவேற்று அதற்குத் தானும் தயாராக வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. இதை உணர்ந்த நம் அரசாங்கமும் "தேசிய மீற்றர் அளவு முறைச்சபை" என்ற ஒரு சபையை நியமித்துள்ளது. இச்சபைமூலம் இம்மீற்றர் அளவுப் புரட்சியை வெற்றிகரமாக நாடு பூராவும் நடாத்தவுள்ளது.

பெரிய பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள், ஆயிரக்கணக்கான பலசரக்கில்லறை வியாபாரிகள், கச்சேரிகள், அரசாங்க கூட்டுஸ்தாபனங்கள், திணைக்களங்கள் சபைகள், பாடசாலைகள், ஒவ்வொரு குடும்பப் பெண்மணிகள் முதலிய சகலரும் இப் புதிய புரட்சியில் குதிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

## புரட்சியின் விளைவு

இப்புரட்சியின் விளைவாக விரைவில் உங்கள் பேச்சிலும் எழுத்திலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடும். ஏக்கரும் பரப்பும்; யாரும் அடியும்; மைலும் சங்கிலியும், கலனும் போத்தலும், சொத்தும் புசலும், தொன்னும் இறாத்தலும், உங்கள் பேச்சு, எழுத்து, சொத்தின் உறுதிகள் மற்றும் தஸ்தாவேஜுகளிலிருந்துவிடைபெற்று விடும். விடைபெற்ற இவற்றின் இடங்களை மீற்றரும் லிற்றரும், கிராமும் கிலோகிராமும் கைப்பற்றி ஆட்சி செலுத்தவுள்ளன.

### குணம்

சீனிவேண்டுமா? ஒரு றூத்தல் தாருங்கள் எனக்கேட்க முடியாது. 1 கிலோ கிராம் சீனி தாருங்கள் என்றே கேட்க வேண்டும். மண்ணெண்ணெய் வேண்டுமா? 1போத்தல் வேண்டும்எனக் கேட்கமுடியாது லிற்றர் அளவிலேயே கேட்கவேண்டும். இதே போன்று 1யார் சித்தையா? அங்கு யாருக்கு இடமில்லை மீற்றரிலேயே கேட்க வேண்டும் பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக வழக்கன்றோ? எனவே காலத்தின் போக்கிற்கமைய, உலக வழக்குக்கு ஏற்ப பழைய அளவுமுறைகளைக் கைவிட்டுப் புதிய அளவுமுறைகளைக் கைக்கொள்ளுதல் பிழையானதொன்றல்ல

## இது வேடிக்கையா?

புராதனகாலச் சீனர்கள் கூடிய தூரத்தைக் கணிக்கும்போது "அப்ஹில் மைல்" எனவும் குறைந்த தூரத்தைக் கணிக்கும்போது "டவுன்ஹில்" எனவும் கொண்டு கணிப்பார்கள்" அதாவது மலையேறும் பொழுது இறங்குவதிலும் பார்க்க ஏறுவது கடினமாக இருக்கும்- இதனால் ஏறுவது கூடிய தூரமாக ஏறுவோருக்குத் தோன்றும் எனவே கூடிய தூரத்தைக் கணிக்கும்போது அவர்கள் "அப்ஹில்" என்ற அளவு முறையையும் குறைந்த தூரத்தைக் குறிக்கும்போது அதன் அளவை "டவுன்ஹில்மைல்" என்றும் அளந்து கூறுவர். இந்த அளவுமுறை நமக்குவேடிக்கையாகத்தான் தோன்றுகிறது. ஆனால் நாம் இதுவரை காலமும் உபயோகித்த அளவைகள் வந்த விதத்தையும் நோக்குவோமானால் அது நமக்கும் மேலும் வேடிக்கையாகவிருக்கும்.

தற்போது நாம் மேற்கொள்ளும் நீட்டல் அளவையோ, நிறுத்தல் அளவையோ] ஏல்லது முகத்தல் அளவையோ யாவும், பிரித்தானியாட்சியின் சின்னங்கள். தம் உடம்பை வைத்தே நம்மையாண்ட வெள்ளையர்கள் இவ்வளவு முறைகளைக் கணித்தார்கள். அவர்கள் பாதத்தின் அளவே இன்று நாம் பாவிக்கும் ஒரு அடிமட்டத்தின் அளவாகும், முதலாவது ஹென்றி மன்னன் தனது மூக்கிலிருந்து தலை பெருவிரல் வரையுள்ள தூரமே ஒரு யார் எனக் கணித்தார். இது வேடிக்கையாகவில்லையா?

## பிரான்சில்

மீற்றர் அளவு முறையை முதன் முதலாகக் கொண்டு வந்த பெருமை பிரான்ஸ் நாட்டிற்கே உரியது. இந் நாட்டிலேயே அவர்கள் முன்னர் கையாண்ட அளவு முறைகள் வேடிக்கையானவை ஒருவர் கம்பளன் புகைத்துக்கொண்டு செல்லும் தூரத்தைக் கணித்து அதை நீட்டல் அளவுமுறையாகக் கொண்டே அரங்களை அளந்தனர். இது போன்றேமற்றும் நிறுத்தல், முகத்தல் முதலிய அளவைகளையும் கணித்தனர்.

## ஜெர்மனியில்

ஜெர்மனியில் 18-ம் நூற்றாண்டில் நீட்டலளவைக்கு 112 அளவு முறைகளும் நிறுத்தலளவைக்கு 163 முறைகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நாடுகளெல்லாம் தமது புராதன அளவுமுறைகளைவிடுத்து இன்றுமீற்றர் அளவு முறைகளை அனுசரிக்கின்றன சமுதாயத்தில் ஒரு மாற்றம் வரும்பொழுது அந்த மாற்றத்துக்குத்தக எம்மை தயாராக்கிக் கொள்வதென்பது இலகுவான காரியமல்ல, எனினும் நாட்டின் நலன் கருதி உலகோடு நாம் ஒத்தோடவேண்டிய அவசியத்தையும் உணர்ந்து இப்புரட்சியால் எமக்கு ஏற்படும் சகல குறைவுகளையும் கஷ்டங்களையும் பாராட்டாது இப்புரட்சி இயக்கத்துக்கு ஒவ்வொருவரும் ஆதரவு அளிக்க வேண்டியவர்களாகிறோம்.

---

# "வீதிகளை விஸ்தரிப்பதில் உள்ள கஷ்டம்"

யாழ்ப்பாணம், திங்கள் "நல்லூர் கந்தசுவாமி கோவில் இலங்கையின் புனித ஸ்தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆனால் கதிர்காமம், கோணேஸ்வரம் போன்று பெரும் மக்கள் கூட்டம் வந்து தரிசித்துச் செல்வதற்குப் போதிய இடவசதி யற்றிருக்கின்றது. ஆனாலும் தற்பொழுது ஆலய வளவு புனிதமாகவே உள்ளது. இவ்வாலயத்தை மேலும் சீர்படுத்தப் போதிய இடமின்மையாகவிருக்கின்றது. இவ்வாலயத்தையடுத்துப் பெரிய கட்டிடங்களைக் கொண்ட வீடுகளும், நிரந்தர ஸ்தாபனங்களும் இருப்பதினால் அவற்றை அப்புறப்படுத்தி வீதிகளைப் பெரிதாக்குவது இயலாத காரியமாகவுள்ளது"

மேற்கண்டவாறு முன்னாள் யாழ் மேயர் திரு. சி. நாகராஜா எம். எம். வி. யாழ் இளைஞர் கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார் யாழ் இளைஞர் கழகத் தலைவர் திரு. இ. இரத்தினசபாபதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

---

# ஸ்ரீரங்கானந்தஜி மகராஜ் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்கள் கொழும்பு இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி ஸ்ரீ ரங்கானந்தஜி மகராஜ் எட்டு ஆண்டுகள் இலங்கையில் சேவையாற்றி விரைவில் இந்தியா செல்லவிருக்கின்றார். தற்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள சுவாமிகள் இம்மாதம் 26ம் திகதி வரையும் சிவதொண்டன் நிலையத்தில் தங்கியிருப்பார் இவரது சொற்பொழிவுகள் 22-ம் 23-ம் திகதிகளில்

---

# மகா சங்காபிஷேகம்

மாவிட்டபுரம், ஞாயிறு கொல்லங்கலட்டிப் பிள்ளையார் ஆலய மகா சங்காபிஷேகவிழா இம்மாதம் 24-ம் நிகழ இருக்கிறது. விநாயக சதுர்த்தி விழாவுடன் இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவை யொட்டி இம்மகா சங்காபிஷேக விழா நடைபெறுகிறது.

இவ்விழாவில் திருமதி ம. பத்மநாதன் பிரமஸ்ரீ, வ. குகசர்மா ஆகியோர் விநாயகர் பெருமைகள் பற்றி உரையாற்றுவர்.

ஆலய மேலைவீதியில் சைவத்தொண்டன் அமரர் சங்கரப்பிள்ளையின் ஞாபகார்த்த மடாலய திறப்பு விழாவும் நடைபெறும்.

காலை அன்னதானமும் மாலை பண்ணிசைப் புலவர் திரு பி ஏ எஸ் இராஜசேகரனின் பண்ணிசைக் கச்சேரியும் மற்றும் கலை நிகழ்சிகளும் இடம் பெறும்.

# மகாகும்பாபிஷேகம்

உடும்பராய் திங்கள் உடும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நவக்கிரக ஆலயத்தில் நவக்கிரகப் பெருமான்களுக்குரிய கும்பாபிஷேகவிழா இன்று முற்பகல் தொடங்கி நடைபெறவுள்ளது.

---

மட்டுவில், ஞாயிறு வாழ்க்கையில் விரக்தியடைந்த அல்லாரையைச் சேர்ந்த 84 வயதான பொன்னுத்துரை என்பவர் தமது வாழ்வை முடித்துக்கொண்டார் விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் கே திரவியநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்

---

வருத்தித்துறையிலும் 24-ந் திகதி வேலணை முருகன் கோவிலிலும் 25ந் திகதி நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் முன்றலிலும் 26-ம் திகதி யாழ்ப்பாணம் திவ்விய ஜீவனசங்க மண்டபத்திலும் நடைபெறும்.

---

# தாவீது அடிகள் முயற்சிக்கு ரூ. 2 ஆயிரம் நிதி உதவி

கோட்டை, ஞாயிறு நீர்ப்பாசனத்துறைத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்திய சிறப்புப் பொதுக்கூட்டத்தில், வணக்கத்துக்குரிய கலாநிதி தாவீதடிகளின் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி ஆக்கத்திற்கான முயற்சிக்கு ரூபா 2000கழக நிதியிலிருந்து வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இம்முயற்சிக்கு இயக்க ரீதியில் கொடுக்கப்படும் முதலாவது பெரிய தொகை இதுவாக இருக்குமென்றும், இதைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள மற்றைய கழகங்களும் சங்கங்களும் தனிப்பட்டவர்களும் இந்நிதிக்குத் தம்மால் இயன்ற உதவியளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் தாவீதடிகள் நீண்டாயுள் பெற்று தமிழ் தொண்டினைத் தொடர்ந்து செய் இறைவருள் கிடைக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கப்பட்டது.

திரு மா க ஈழவேந்திரன் (ஈழவேந்தன்) சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டு மொழியை வளம்படுத்தி வழிகள் என்னும் பொருள் பற்றி உரையாற்றினார்

கவிஞர் மஹாகவியின் மறைவுக்கு கழகம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

---

# ஆலய பரிபாலன சபை

புங்குடுதீவு, ஞாயிறு புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலய புதிய பரிபாலன சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: நா சோமசுந்தரம், செயலாளர்: சி. மாணிக்கம், தனாதிகாரி: மு. இராமலிங்கம்.

---

# புனிதநகராகப் பிரகடனம்

கொழும்பு, ஞாயிறு பொலநறுவை புனிதநகராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை நடைபெற்ற இந்த வைபவத்தில் கலாச்சார அமைச்சர் திரு எஸ் எஸ். குலதிலக கலந்துகொண்டு புனிதநகர் நுழைவாயிலைத் திறந்து வைத்தார்.

---

# விற்பனைக்கு

புத்தகம்

"கணித விஞ்ஞான வாய்பாடுகள்" - திருத்திய இரண்டாம் பதிப்பு-இதில் அலகுகள், அலகு மாற்றம், சூத்திரங்கள், மடக்கைகள், திரிகோண கணித வாய்பாடுகளுடன், G. C. E. வகுப்பிற எண்கணிதம், தூயகணிதம், பௌதிகம், இரசாயனம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் படிக்கும் மாணவர்களுக்கு முக்கிய குறிப்புக்கள் யாவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விற்பனை உரிமையாளர்கள் தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம். விலை ரூபா 1-90

3502

---

# விளையாட்டுப்போட்டி

வல்வெட்டித்துறை, ஞாயிறு சக்கோட்டை - செல்வேலியர் வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 29ந் திகதி பருத்தித்துறை காரியாதிகாரி திரு எம் தம்பிமுத்து தலைமையில் நடைபெறவிருக்கின்றது. பிரதமவிருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு கே. நல்லைநாதன் கலந்து கொள்வார் !

---

# வெற்றுச் சாக்குக் கேள்வி விண்ணப்பம்

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 10000 வரையிலான வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களில் பூர்த்திசெய்யப்பட்டு சீலிடப்பட்ட உறைகளில் வைத்து 28-8-71 பகல் 12-00 மணிக்கு முன்னதாகச் சங்கத்தில் சேர்ப்பிக்கப்படவேண்டும். விண்ணப் பத்திற்குரிய வைப்புப்பணம் ரூபா 250/ ஆகும்

இங்ஙனம்
பொதுமுகாமையாளர்
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்,
அளவெட்டி

2975

---


## யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு
Jaffna College Undergraduate Department

## பிரவேசம் — செப்டெம்பர்
ADMISSIONS - SEPTEMBER

க. பொ. த. ப. [உ. த] கலை, விஞ்ஞானம்
G. C. E. (A. L) Arts & Science

விண்ணப்பப் பத்திரமும் விபரங்களும், முத்திரை ஒட்டப்பட்டதும் விலாசமிடப்பட்டதுமான நீண்ட தபாலுறையுடன் -/50 சதம் தபாற்தலைகளையும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டுக்கோட்டை — பதிவாளர்

2647

## மணிவாக்கு

அறிவு என்பது ஆற்றைப்போன்றது. அது எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சத்தமின்றி அமைதியாயிருக்கும் — பேக்கன்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

விரோதிகிருது வருஷம் ஆவணிமாதம் 7-ந் திகதி (23-8-71)


## கல்வி அமைச்சின் அரிய கருத்து

கல்வி அமைப்பிலும் நிர்வாகத்திலும் மாற்றமெதுவும் செய்யப்படும்போது ஆசிரிய தொழிற் சங்கங்களைக் கலந்தாலோசித்தே செய்யப்படுமென்று கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு பிரேமதாச உடகம யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது தெரிவித்திருப்பது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல கல்வியின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவருக்குமே நிச்சயம் மகிழ்ச்சியளிக்கும். இது பழையகொள்கையானாலும் இந்தச் சமயத்தில் புதிய முறையில் அவர் தெளிவுபடுத்தியிருப்பதைக் கல்வி உலகம் பாராட்டி வரவேற்குமென்பது திண்ணம்.

ஆசிரியர் பங்குகொள்ளாத கல்வித்திட்டம் அரிச்சந்திரனில்லாத மயானகாண்ட நாடகம் போன்றதெனக் கூறுவது வெகு பொருத்தம். எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் என்ன பிரச்சினை தோன்றினாலும் அவற்றுக்கான முழுப்பொறுப்பையும் கல்வியிலும் கல்வியின் நோக்கங்களிலும் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களிலுமே சுமத்திவிடுகிறார்கள். இதில் நியாயமில்லையென்றும் சொல்லிவிட முடியாது. ஆனால் வாராதாரமான பிரச்சினையை மிகச்சுலபமான விளக்கம் குறைந்த முறையில் அணுகும்போது அது நல்ல பயனை அளிக்குமா என்பது சந்தேகமே!

பொறியியல் திட்டங்கள், தொழில்நுட்பம், விவசாயம், வர்த்தகம், சுகாதாரம், வீடமைப்பு போன்ற அபிவிருத்தி வேலைகளிலும் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதிலுமாகப் பல துறைகளிலும் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. பிற நாடுகளிடமிருந்து பணத்தையும் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியையும் மட்டுமல்லாது மற்றும் பல்வேறு வழிகளிலும் அவற்றின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு அரசு முயற்சிசெய்து வருகின்றது. நாட்டின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாத இவ்வேலைகள் நிறைவேறிய போதும், வருங்காலத்தில் நிரந்தரமான முன்னேற்றத்துக்கும் ஆக்கவேலைகளுக்கும் அவசியம் தேவைப்படுவது எமது ஆசிரியர்களால் உருவாக்கப்படும் பண்பட்ட திறமைசாலிகளே,

கலாநிதி உடாகம இந்தக்கருத்தை யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கு நம்பிக்கையூட்டும் முறையில் இடித்துரைத்திருக்கிறார். ஆயினும் இந்த மிகப் பொறுப்பு வாய்ந்த கடமையை ஆசிரியர்கள் எந்த நிலையில் சரிவர ஒப்புக்கொள்ளலாம் என்பது ஒரு பெரியகேள்வி, அதை ஒரு சவாலென்றேகூடக் கருதலாம் கல்வி போதிப்பவர்களோ, கல்வித் திணைக்களங்களில் கடமையாற்றும் நிர்வாகிகளோ கல்விமுறைகளுக்குப் பொறுப்பான மேலதிகாரிகளோ மிகவும் அவசியமாகவும் அவசரமாகவும் ஆராயவேண்டிய பிரச்சினை இதுவே, நாட்டின் நன்மைக்கும் அதன் வளத்துக்கும் தேவைப்படும் மூலதனம் ஒழுக்கமுற்ற கடமையுணர்ச்சியும் திறமையும் ஒருங்குசேர்ந்த மனித செல்வம், மற்றென்ன வசதிகள் இருந்தும் இந்த மூலதனம் இல்லாவிடின் தேசிய அபிவிருத்தி என்னும் வியாபாரம் வங்குரோத்தில்தான் முடியும், மற்றென்ன வசதிகள் குறைந்தபோதும் நாட்டைக் காப்பாற்றவும். தியாக உணர்ச்சியுடனும், திறமையுடனும் தொழில் புரியத் தயாராகவுள்ள வாலிபர்கள் இருந்தால் வருங்காலம் நம்பிக்கை ஒளி உள்ளதாகும்.

எனவே கல்வியின் உண்மையான நோக்கம், திறமையான பொறியியல்நிபுணரையோ அல்லது பிரசித்திபெற்ற விஞ்ஞானிகளையோ வைத்திய வீரர்களையோ உருவாக்குவதல்ல நமக்கு அவசியத் தேவைப்படுவது நல்ல மனிதரே. இது ஓர் அடிப்படை உண்மையாயிருந்த போதிலும், பலர் புரிந்துகொள்ளவில்லையென்பதும் உண்மையே. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உணவு, உடை, வீடு, போக்குவரத்து போன்ற வசதிகள் மிகவும் அவசியம் ஆயினும் மனித வளர்ச்சிக்கு, முன்னேற்றத்துக்கு ஆத்மீக வளர்ச்சி அதனிலும் அவசியம், மனிதப் பண்பாட்டுக்கு முக்கிய இடம் அளிக்காவிட்டால் கல்வியில் எவ்வித சீர்திருத்தமும் பயன்தராது. பண்பட்ட மனிதன் தன்னலமற்றவனும் மக்களின் இன்ப துன்பங்களில் ஈடுபட்டவனுமாயிருக்கவேண்டும். இன்றைய உலகின் விவகாரங்களை அதிநுட்பத்துடன் ஆராய்ந்து தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தவும் அதற்கேற்ப வாழவும் வல்லமையுள்ளவனுமாயிருக்கவேண்டும். எவ்வித பயன்தரும் தொழிலிலும் ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் ஈடுபட்டு நாட்டின் செல்வத்தை வளர்க்க உதவவேண்டும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும் சேவை செய்து நாட்டில் சமூகநீதியைப் பரப்ப முன்வர வேண்டும்.

கல்வியின் நோக்கம் இதுவானால் ஆசிரியனின் பொறுப்பு எத்தகையதென்பது கற்பனைகடந்து நிற்கும் காரியமாகும். இருந்தும் இது கல்வி அமைச்சை மட்டும் பொறுத்த விஷயமல்ல எங்கள் நாட்டின் சரித்திரம் காணாத கஷ்டநிலையில் நாம் பல்வேறு துறைகளிலும் முன்னேறவேண்டியிருக்கிறது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் மிக நெருக்கடியான காலம் ஆனால் அதே சமயம் நாட்டு மக்களின் தேசப்பற்று, கடமையுணர்ச்சி கட்டுப்பாடு கடினவாழ்வு போன்ற நற்குணங்களை வளர்க்கும் சோதனைகாலமாகும் இந்த நற்குணங்களைத்தான் நமது பாடசாலைகளும், நமது ஆசிரியர்களும் வளர்க்கவேண்டும் பாடசாலைகள் போர்க்களமாகவும் ஆசிரியர் அறியாமையால் விளையும் தீக்குணங்களைத் துரத்தியடிக்கும் போர்ப்படையாகவும் பணிபுரியவேண்டும் இவ்வித தேசியப் போராட்டத்தில் ஆசிரியப்படை அறியாமையை நீக்கி, தெளிவான சிந்தையும் தியாக உணர்ச்சியும் நிறைந்த மனிதகுலத்தை வளர்க்கும் பணியில் வெற்றிபெற வேண்டுமானால் அந்தப் பொறுப்பு அரசாங்கம் முழுவதுக்கும் உரியது.

ஆசிரியர்களின் இன்னல்களும், அவர்கள் அனுபவிக்கும் விரக்திமனப்பான்மையும் நாடறிந்ததை இப்பெரும் பொறுப்பில் அவர்கள் உண்மையில் ஈடுபடுவதென்றால் முதன் முதலாக கொடியவறுமை வாழ்க்கையிலிருந்து விடுதலை அடைய வேண்டும் அதுமட்டுமல்ல கல்வியில் புலமை புள்ளவர்களாய் அறிவைத்தேடும் அவா உடையவர்களாய், சிந்தனைச் சுதந்திரமுடையவர்களாய், ஆசிரியப்பணிக்கு வந்தனை செலுத்துபவர்களாய் ஆசிரியகுலத் தழைக்க ஆசிரிய சமூகமும் நாட்டின் மக்கள் சமுதாயமும் தக்கசூழ்நிலையை ஏற்படுத்தவேண்டியது அவசியம். இவ்வித சூழ்நிலை கிடைக்காவிடின் கல்வி அமைச்சின் கருத்து நீர்மேல் எழுத்துப்போலாகிவிடும்

# சீனத்து சாம்பியன்களின் யாழ்ப்பாண விஜயம்

உலக 'டேபிள் டெனிஸ்' வெற்றி வீரர்களான சீனத்துச் 'சாம்பியன்கள்' யாழ்ப்பாணத்துக்குச் சனிக்கிழமை இரவு 8 மணிக்கு வருவதாகவும், ரயில்வே ஸ்டேஷனில் அவர்களை வரவேற்க வரவேண்டும் என்றும் மாவட்டநீதிபதியும் டேபிள் டெனிஸ் சங்கத் தலைவருமான வைத்திலிங்கம் அவர்கள் கேட்டுக்கொண்டு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

சரியாக 7-45 மணிக்கு அங்கு சென்றேன். இரு பெரிய வல்லரசுகளான அமெரிக்காவுக்கும், புது சீனத்துக்கும் புதிய நட்புறவை ஏற்படுத்திய அந்த வெற்றி வீரர்களைப் பார்க்க யாருக்குத்தான் ஆவல் இராது?

கொழும்பிலிருந்து வண்டி இரவு இரவு 9-45க்குத்தான் வருவதாக ஸ்டேஷனில் எழுதி அறிவித்திருந்தனர். பின்னர் விசாரித்ததில் அவ்வீரர்கள் குளிர் ஊட்டிய ஸ்பெஷல் ரயிலில் வருவதாகவும் அது 8 மணிக்கு வருவதாகவும் கூறப்பட்டது. பலர் மாலைகளுடன் வந்திருந்தனர், 'உலக சாம்பியன் வீரரே வருக வருக' என்ற வரவேற்பு வசனம் அடங்கிய கொடிகளைச் சிலர் கொண்டுவந்தனர். அந்த ஸ்பெஷல் வண்டி 8-10க்கு வந்தது. ஆனால் சீனத்து வெற்றி வீரர்களை அதில் காணவில்லை.

அதில் அவர்கள் ஏன் வரவில்லைத் தெரியுமா? குளிர் ஊட்டிய அந்த ஸ்பெஷல் வண்டியில் அவர்கள் பிரயாணஞ்செய்ய விரும்பவில்லை என்றும், பொதுமக்களைப் போல் சாதாரண வகுப்பில் பிரயாணஞ் செய்யவேண்டுமென்றுமே யாழ்தேவியில் அவர்கள் வருவதாகவும் ஓர் அன்பர் தெரிவித்தார்.

இதைக் கேட்டதும் அவ்வீரர்கள் மீது எனக்கிருந்த மதிப்பு முன்னிலும் அதிகரித்தது.

0 0 0

கவியோகி சுத்தானந்த பாரதியாருக்கு உடல்நிலை சரியில்லையாம், சுமார் 10 நாட்கள் சென்னை ஆஸ்பத்திரியில் இருந்துவிட்டு, இப்போது அடையாறிலுள்ள தமது ஆசிரமத்துக்குத் திரும்பியிருப்பதாகவும், சற்றே குணமடைந்துவருவதாகவும் இங்கு ஓரன்பருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

உடல்நிலை சரியில்லாதிருந்தும் பல புதிய நூல்களை அவர் எழுதியும், டேப்ரிகார்டரில் ஒலிப்பதிவுசெய்தும்




வருவதாகவும் ஓய்வெடுத்துக்கொள்ள அவர் மறுப்பதாகவும் தெரிகிறது. எழுபது வயதுக்கு மேலாகிய இக்கவியோகி போல் இவ்வளவு நூல்களைத் தமிழ் ஆங்கிலம் முதலிய மொழிகளில் எழுதி வெளியிட்டுள்ளவர்கள் வேறு யாருமுண்டா என்பது சந்தேகம். மிக எளிமையான சுவாமிகள் அவர் தமிழ்நாட்டின் ஓர் அரும்பெருஞ்செல்வம்.

அவர் வாழவாழத் தமிழ் பயனுள்ள அதிக நூல்கள் வெளியாகும். அவர் சீக்கிரம் குணமடைந்து நீடூழி வாழத் திருவருளை வேண்டுவோம்.

0 0 0

உடல் நலம் அவ்வளவு சரியில்லை. என்றாலும் நல்லூர்த் தேர்த்திருவிழாவுக்குக் கொழும்பிலிருந்து வரவேண்டுமென்று ஆவல் ரயிலில் கூட்டம் தாங்காதே என்று அச்சம். என்றாலும் நடப்பது நடக்கட்டும் என்று ரயிலில் மூன்றும் வகுப்பு டிக்கெட் எடுத்தேன். என் நண்பர் இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கினார். ஆனால் அந்த வகுப்பில் மிக நெருக்கம். நிற்கக்கூட இடமில்லை என்று சொல்லி மூன்றும் வகுப்பிலேயே பிரயாணஞ்செய்தார். அன்று நல்லூரான் அருளால் முதற் பெட்டியில் படுத்துக்கூட வரக்கூடியதாக இருந்தது!

வண்ணார்பண்ணையிலிருந்து நல்லூருக்குச் செல்ல வேண்டுமாயின் பஸ் ஸ்டான்டுக்குச் சென்றே பஸ் ஏறவேண்டும். அதாவது ஸ்டாண்டுக்காக பல பர்லாங் தூரம் நடந்து செல்லவேண்டும். விழாவுக்கென ஸ்டாண்டிலிருந்து நல்லூருக்கு விசேஷ பஸ்ஸுகள் ஓடியது வரவேற்கத்தக்கதே இல்லாவிடில் பருத்தித்துறை முதலிய நெடுந்தூர பஸ்ஸில்தான் செல்ல வேண்டியிருக்கும்.

இலங்கையிலே யாழ்ப்பாணம் தான் இரண்டாவது பெரிய நகரம், இங்கு டவுன் பஸ்கள் ஓடுவதாயின் இந்த மாதிரிக் குறைகள் பெருமளவு குறைக்கக்கூடும். நகரைச் சுற்றி டவுன் பஸ்ஸுகள் அடிக்கடி ஓடுவது பொதுமக்களுக்கு அதிக வசதியாவதுடன், இ.போ.ச. வுக்கு வருமானமும் அதிகரிக்கும். பலபுதிய சீர்திருத்தங்களைச் செய்துவரும் இ.போ.ச. அதிகாரிகள் இங்கு டவுன் பஸ்ஸுகளை சீக்கிரத்தில் விட ஏற்பாடு செய்வார்களா?

## சாவகச்சேரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துப் பேசுவதற்கு உத்தேசித்திருக்கிறேன்'' என்று பதிலளித்தார்.

அடுத்த மாதம் 10-ம் திகதியிலிருந்து 14-ந் திகதி வரை பாரிசில் சர்வதேச பாராளுமன்றச் சங்கத்தின் மகாநாடும் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டமும் நடைபெறும். பொதுச்சபைக் கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லிகுணவர்த்தனாவும் திரு வி என் நவரத்தினமுமே இலங்கையின் சார்பில் கலந்துகொள்வர். (ஈ.நா.நி)

## மரண அறிவித்தல்

ஏ. திருநாவுக்கரசு(அரசு)

சிலோன் ஸ்ருடியோஸ் லிமிட்டெட்டைச் சேர்ந்த ஏ. திருநாவுக்கரசு (அரசு) காலமாகிவிட்டார். இவர் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை சுகுணாம்பிகையின் அன்புக்கணவராவார். அன்னாரின் பூதவுடல் கொக்குவில் தபாற்கந்தோருக்கு அருகாமையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக இன்று (23-8-71) மாலை 3 மணிக்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

2648

## மரண அறிவித்தல்

வைத்தியகலாநிதி

செல்லப்பா ஆனந்தர்

செல்லம்மாவின் அருமைக் கணவரும், ராணி, இந்திரசேனன் (நைஜீரியா) மீனலோசனி, ரவீந்திரன் (லண்டன்) நருலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகசபை (ஆசிரியர் விக்னேஸ்வர வித்தியாசாலை) அமிர்தலிங்கம் (இராமநாதன் கல்லூரி) மாதவாம்பிகை ஆகியோரின் அருமை மாமனுமானவர். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சத்தர்மடம் 33, பழம் ரோட் இல்லத்திலிருந்து ஈமைக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

2648

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சஷ்டியப்த பூர்த்திவிழா

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பிரம்மஸ்ரீ சு சுப்பிரமணியக்குருக்கள் தம்பதிகளின் சஷ்டியப்த பூர்த்தி விழா பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவிலில் நடைபெற்றது.